**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண். 176/2016**

**இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. G. செல்வி, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2023 ஆண்டு மார்ச் மாதம் 13-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.**

**தேதி - 13.03.2023**

**பெயர் - சதாசிவம்**

**த/பெ - நாராயணன்**

**வயது - 65**

**சாட்சி - PW1**

**ஊர் - ஈரோடு**

**தொழில் - மருத்துவர்**

**விசாரணை தொடங்கும் நேரம்- 01.17 p.m.**

**முதல் விசாரணை -**

1. நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனது வாக்குமூலம் பிரமான பத்திரம் மூலம் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. எனது வழக்கிற்கு ஆதரவாக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

2. (1). 24.08.1994 தேதியிட்ட கிரைய பத்திரம், ஆவண எண் 3498/1994 பதிவு அலுவலகம் செங்குன்றம் சான்றிட்ட நகல் **(வாசா ஆ 1)** ஆகவும்,

(2). வழக்கு சொத்திற்கு என் பெயருக்கு வழங்கப்பட்ட கணினி வழி பட்டா **(வாசா ஆ 2)** ஆகவும்,

(3). 25.07.2016 தேதியிட்ட எனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு நான் அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் **(வாசா ஆ 3)** ஆகவும்,

(4). முதல் பிரதிவாதி நான் அனுப்பிய மேற்படி அறிவிப்பினை பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்டதற்கான அசல் அஞ்சல் உரை **(<u>வாசா ஆ 4</u>)** ஆகவும்,

(5). இரண்டாம் பிரதிவாதி நான் அனுப்பிய மேற்படி அறிவிப்பினை பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்டதற்கான அசல் அஞ்சல் உரை **(<u>வாசா ஆ 5</u>)** ஆகவும்,

(6). மூன்றாம் பிரதிவாதி நான் அனுப்பிய மேற்படி அறிவிப்பினை பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்டதற்கான அசல் அஞ்சல் உரை **(<u>வாசா ஆ 6</u>)** ஆகவும்,

(7). நான்காம் பிரதிவாதி நான் அனுப்பிய மேற்படி அறிவிப்பினை பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்டதற்கான அசல் அஞ்சல் உரை (**<u>வாசா ஆ 7</u>**) ஆகவும்,

(8). மேற்படி அறிவிப்பினை ஐந்தாம் பிரதிவாதி பெற்றுக்கொண்டமைக்கான அஞ்சல் ஒப்புகை அட்டையின் அசல் **(<u>வாசா ஆ 8</u>)** ஆகவும்,

(9). மேற்படி அறிவிப்பினை ஆறாம் பிரதிவாதி பெற்றுக்கொண்டமைக்கான அஞ்சல் ஒப்புகை அட்டையின் அசல் **(<u>வாசா ஆ 9</u>)** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவா படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>5,6,14வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

3. நான் என்ன பரிகாரம் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய நிலத்தை பிரதிவாதிகள் ஆக்கிறமித்து வீடு கட்டியுள்ளார்கள் மேலும் அதில் போலி ஆவணங்கள் வைத்து மின்சார இணைப்பு பெற்றுள்ளார்கள் மின் இணைப்பை ரத்து செய்கோரியும் ஆக்கிறமிப்பை அகற்றி சுவாதீணம் ஒப்படைக்க கோரி பாரிகாரம் கோரியுள்ளேன். நான் எந்த வருடத்தில் வழக்கு சொத்தினை வாங்கினேன் என்றால் 1994ல் வாங்கினேன். மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 36 சென்ட் ஆகும். மேற்படி மின் இணைப்பினை வழக்கு சொத்தில் நுகர்வோர் என்ற முறையில் பிரதிவாதிகள் பெற்றுள்ளனர் என்றால் சரியல்ல போலி ஆவணங்களின் அடிப்படையில் பெற்றுள்ளனர்.

4. மின் இணைப்பை நீதிமன்றத்தின் உத்தரவின் பெயரில் துண்டிக்க கோரியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கும் 1 முதல் 4 மற்றும் 7 முதல் 13 வரையிலானவர்களின் பிரதிவாதிகளுக்கு எதிரான வழக்கு இது என்றால் சரியல்ல. எனக்கும் மின் இணைப்பு துறைக்கும் மற்றும் மற்ற பிரதிவாதிகளுக்கும் இடையே ஆன வழக்கு இது. மேற்படி

மின் இணைப்பு நுகர்வோர் ஆவணம் மற்றும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றும் வாதிக்கும் மின் இணைப்பு துறைக்கும் எந்த நேரடி பிரச்சனையும் இல்லை என்றால் சரியல்ல. மின்சார துறை சரியான ஆவணங்கள் சரிபார்க்காமல் மின் இணைப்பை பிரதிவாதிகளுக்கு அளித்ததால் தான் இவ்வழக்கில் பரிகாரம் கோரியுள்ளேன்.

**(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க ஒத்திவைக்கப்படுகிறது)**

**விசாரணை முடியும் நேரம்- 01.24பி,அ,**